**சிவகாசி நகர்மன்றம்**
**அவசரக் கூட்டம்**

**நகராட்சி அலுவலகம்.**
**அவசரக்கூட்டம் எண் .** **நாள் :18.06.2021.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2052 பிலவ வருடம் ஆனி திங்கள் 04 ஆம் நாள் 2021ம் ஆண்டு ஜீன் மாதம் 18ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு. சோ.பார்த்தசாரதி,B.P.T., M.Sc.(Psy).**
**தனி அலுவலர்.**

**பொருள் :**

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.24811/2020-1/ஜே3, நாள்: 19.02.2021-ல் உசிலம்பட்டி நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வந்த திரு.தவசிலிங்கம் என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக சிவகாசி நகராட்சிக்கு பணியிடை மாறுதல் கோரி விண்ணப்பம் பரிந்துரை செய்து உசிலம்பட்டி நகராட்சி ஆணையர் அவர்களின் நகர்மன்ற தீர்மான எண்.4, நாள் : 17.02.2021 ன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே சிவகாசி நகராட்சியில் காலியாக உள்ள தூய்மை பணியாளர் பணியிடத்திற்கு பணி அமர்த்த மன்ற அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி ஓ.மு.எண்.599/2021/அ4, நாள்: 25.02.2021-ல் சிவகாசி நகர்மன்ற தீர்மான நகல் அனுப்ப கோரியுள்ளது. அதன்படி சிவகாசி நகராட்சியில் தூய்மை பணியாளர்கள் காலியிடத்தில் திரு.தவசிலிங்கம் என்பவரை பணியிடை மாறுதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு:** மன்றம் பரிசீலனை செய்து அனுமதிக்கலாம்.

   **ந.க.எண்: 3120 /2021/எச்1**
   அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1142

2. அரசாணை (பல்வகை) எண்.**17**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் **17.2.2021**ல், திருத்தங்கல் நகராட்சியின் வரம்பிற்கு உட்பட்ட முழு பகுதியையும், சிவகாசி நகராட்சியுடன் இணைத்து ஆணைகள் வெளியிடப்பட்டு, தமிழ்நாடு அரசிதழ் எண்.**98**, நாள் **17.2.2021** அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பினை தொடர்ந்து, திருத்தஙகள் நகராட்சியை சிவகாசி நகராட்சியுடன் இணைப்பது தொடர்பாக மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வரவு செலவு புத்தகஙகள் மற்றும் அனைத்து வஙகி காசோலை புத்தகஙகளையும் சிவகாசி நகராட்சி வசம் ஒப்படைக்க ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், திருத்தஙகல் நகராட்சி பகுதியினை சார்ந்த பொது மக்களால் ஆணையாளர் அறையினை முற்றுகையிடப்பட்டு, திருத்தஙகல் நகராட்சியை சிவகாசி நகராட்சியுடன் இணைக்கக்கூடாது என வலியுறுத்தப்பட்ட போது, திருத்தஙகல் ஆணையரின் அழைப்பின்படி மாவட்ட காவல்துறை துணை ஆய்வாளர் மற்றும் காவல் துறை அலுவலர்கள் ஆகியோர் திருத்தஙகல் நகராட்சிக்கு வருகை தந்து, சார் ஆட்சியர் மற்றும் தேர்தல் பிரிவு அதிகாரி அவர்களிடம் தொலைபேசியில் பேசிய போது தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால், நன்னடத்தை விதிகள் முடிவு பெறும் வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என தெரிவிக்கப்பட்டது

என்றும், இந்த அறிவுரையின்படி, தேர்தல் நன்னடத்தை விதிகள் முடிவுபெறும் வரை திருத்தங்கல் நகராட்சியை சிவகாசி நகராட்சியுடன் இணைப்பது தொடர்பான பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விவரத்தினை திருத்தங்கல் நகராட்சி ஆணையரால், சிவகாசி நகராட்சி ஆணையருக்கு 9.4.2021ம் நாளியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் சிவகாசி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.A.M.S.G.அசோகன்,B.Com., அவர்களால் கீழ்க்காணும் சஙகஙகள் மற்றும் அமைப்புகளிடமிருந்து திருத்தங்கல் நகராட்சியை சிவகாசி நகராட்சியுடன் இணைப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டி, ஏற்கனவே 2018ம் ஆண்டு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி சிவகாசி நகராட்சியுடன் ஆனையூர், சித்துராஜபுரம், விஸ்வநத்தம், நாரணாபுரம், பள்ளப்பட்டி, அனுப்பன்குளம், சாமிநத்தம், செஙகமலநாச்சியார்புரம், தேவர்குளம் ஆகிய பஞ்சாயத்துகளையும் அதனுடன் திருத்தங்கல் நகராட்சியையும் இணைத்து மாநகராட்சியாக அமைக்கும் நடவடிக்கை எடுக்கும் வரையில், திருத்தங்கல் நகராட்சி, சிவகாசி நகராட்சியுடன் இணைப்பதை தவிர்க்குமாறு கோரியுள்ளார்.

(1) சிவகாசி இந்து நாடார் உறவின்முறை கோரிக்கை கடிதம்

(2) சிவகாசி சேனைத்தலைவர் உறவின்முறை கோரிக்கை கடிதம்

(3) சிவகாசி கத்தோலிக்க திருச்சபை உறுப்பினர்கள் கோரிக்கை கடிதம்

(4) இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் கோரிக்கை கடிதம்

(5) திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை கோரிக்கை கடிதம்

(6) திருத்தங்கல் வாழ் பறையர் உறவின்முறை கோரிக்கை கடிதம்

(7) சுவாமி விவேகானந்தர் வர்த்தக சஙகம் கோரிக்கை கடிதம்

(8) ஆதிதிராவிடர் உறவின்முறை கோரிக்கை கடிதம்

(9) திருத்தங்கல் எட்டு சமூகத்தார் உறவின்முறை கோரிக்கை கடிதம்

மேலும், சிவகாசி நகராட்சியின் 2011ம் ஆண்டு மக்கள் தொகை 71040 எனவும், திருத்தங்கல் நகராட்சியின் 2011ம் ஆண்டு மக்கள் தொகை 55362 எனவும், மேற்கண்ட இரு நகராட்சிகளின் மொத்த மக்கள்தொகை 2011ம் ஆண்டு கணக்கின்படி 1,26,402 எனவும், மொத்த வருவாய் 1,550 லட்சம் எனவும், மேற்கண்ட கணக்கீட்டின்படி உள்ள மக்கள்தொகை, பரப்பளவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு திருத்தங்கல் நகராட்சியை மட்டும் இணைத்து அரசாணை (பல்வகை) எண்.17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (தேர்தல்) துறை நாள் 17.02.2021 யின்படி நகராட்சியாகவோ/மாநகராட்சியாகவோ உருவாக்கும் பட்சத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இல்லை என்றும், திருத்தங்கல் நகராட்சியில் தீப்பெட்டி

மற்றும் பட்டாசு தொழில் செய்யும் குடிசை தொழிலாளர்கள் அதிகமாக வசித்து வருவதால் மேற்படி பொதுமக்களின் வரி இனஙகள் மற்றும் அலைச்சல் சுமையை குறைக்கும்

காரணஙகளை கருத்தில் கொண்டு, மேற்கண்ட அரசாணைக்கு பல்வேறு அமைப்புகளிலிருந்து ஆட்சேபனை தெரிவித்திருப்பதாலும், திருத்தஙகல் நகராட்சியை சிவகாசி நகராட்சியுடன் இணைப்பதை தவிர்க்க தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொள்வதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் திரு.A.M.S.G.அசோகன், B.Com., அவர்களின் 16.06.2021 ம் தேதிய கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரஙகளை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழியாக அரசின் பார்வைக்கு கொண்டு செல்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண் 5679/2017/எப்1

அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1143

3. சிவகாசி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN- 84 V 1120-க்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை சரி செய்யவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.33,000/-க்கும் (ரூபாய் முப்பத்தி மூன்றாயிரம் மட்டும்) மேற்படி தொகையினை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 3183 / 2021 / எச்2**

அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1144

4. சிவகாசி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN-84 V 1156-க்கு வாகனத்தில் உள்ள பேட்டரி பழுதடைந்துள்ளதாலும் மேற்கண்ட வாகனத்திற்கு இதற்கு முன்னால் பேட்டரி ( மின்கலம் ) எதுவும் மாற்றப்படவில்லை என்பதாலும், மேற்கண்ட வாகனத்திற்கு புதியதாக பேட்டரி (மின்கலம் ) வாங்கி பொருத்த அதற்கு உத்தேச தோரயமாக செலவுத் தொகை ரூ.6000/-க்கும் (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 3080/ 2021 / எச்2**

அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1145

5. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் TN-67 Z 2901 டிரெய்லர் வாகனத்திற்கு பழுது பணிகளை நீக்கம் செய்து மற்றும் தேவையான உதிரி பாகங்களை மாற்றி சரி செய்யும் பணிக்கு தொகை ரூ.46,000/-க்கு (ரூபாய். நூற்பத்தி ஆறாயிரம் மட்டும்) இந்நகர்மன்ற தீர்மான எண் 1134 நாள்: 12.05.2021-ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 08.06.2021 தேதி ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | சிவா ஆட்டோ ஒர்க்ஸ்,<br>50 பாரதி நகர், PKN பைபாஸ் ரோடு,<br>சிவகாசி. | 49,800/- |
| 2. | ஆறுமுகம் ஆட்டோ மொபைல்ஸ்<br>3/1292D, பாரைப்பட்டி, சாத்தூர் ரோடு<br>சிவகாசி | 46,315/- |

**அலுவலக குறிப்பு :**

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்த புள்ளிகளில் வரிசை எண் 2-ல் உள்ள பணிமணைதாரரின் ஒப்பந்த புள்ளி குறைவாக உள்ளதாலும் மேலும் மேற்படி வாகனம் தினந்தோறும் குப்பை சேகரிக்கும் பணிக்கு அத்தியாவசிய தேவையாக உள்ளதாலும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : 2684 / 2021/ எச்2
அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1146

6. நகராட்சிக்கு எதிரான வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு.செந்தில் குமரையா அவர்களிடம் இருந்து கீழ்க்கண்ட வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வழக்கின் சுருக்கம் | வழக்கு எண் | வழக்கின் தன்மை | வழக்கறிஞர் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் குழாயில் மின்மோட்டார் மூலம் குடிநீர் உறிஞ்சியதர்க்காக மின்மோட்டார் நகராட்சி மூலம் பறிமுதல் செய்யப்பட்டது. மின்மோட்டாரை திரும்ப வழங்க கோரி ஜான்சிராணி என்பவரால் சிவகாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு | AS.No1/2020 | நிலுவை | 5000 |
| 2 | குடிநீர் குழாய் இணைப்பு வணிகப்பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாடகமாற்றம் செய்ய கோரி சுதர்சன் என்பவரால் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு | OS.No.11/2021 | நிலுவை | 5000 |

மேற்கண்ட பட்டியல் தொகை ரூ.10000/- நகராட்சி சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு.செந்தில் குமரையா அவர்களுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.0009/2020/இ2.
அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1147

7. சிவகாசி நகராட்சியினை உள்ளடக்கிய தாமிரபரணி ஆற்றினை ஆதாரமாக கொண்ட இராஜபாளையம், சங்கரன்கோவில், புளியங்குடி, சிவகாசி. திருவேங்கடம் கூட்டுக்குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.543.20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை அரசாணை எண்-6 நாள்-30.1.2017-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் கீழ்கண்டவாறு ஆகும்.

| **வ.எண்** | **விபரம்** | **தொகை ரூ. (கோடியில்)** |
|---|---|---|
| 1. | உலக வங்கி கடன் தொகை | 25.74 |
| 2. | உலக வங்கி நிதி மற்றும் மத்திய, மாநில அரசின் மாயன்யம் | 66.94 |
| 3. | நகராட்சியின் பங்குத்தொகை | 10.30 |
| | மொத்தம் | 102.98 |

தமிழ்நாடு நிலையான நகர்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத்திட்டதின் கீழ் உலக வங்கி கடன் தொகை ரூ.25.74 கோடி, தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதி நிதி சேவை நிறுவனத்தின் கடிதம் எண்- TNUDF/Projects/Sivakasi/WSIS நாள்:31.03.2017-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சங்கரன் கோவில், இராஜபாளையம், புளியங்குடி, திருவேங்கடம் கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் மெதுவாக நடைபெற்று வருவதாலும், சாலைகளை தோண்டுவதற்க்கு மற்ற துறைகளிடம் அனுமதி பெறுவதில் தாமதமாவதாக இருப்பதாலும், கொரோனா தொற்று காலமாக இருப்பதாலும் பணிகள் நடைபெறுவதில் சுணக்கம் ஏற்ப்பட்டுள்ளது.
மேலும், சங்கரன் கோவில், இராஜபாளையம், புளியங்குடி, திருவேங்கடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் உலக வங்கியுடன் இந்நகராட்சி ஒப்பந்தம் செய்து கொண்ட ஒப்பந்த பத்திரத்தின் கால அளவு 16.02.2018-ல் மூன்று வருடங்கள் முடிவுற்றதால் மேற்படி ஒப்பந்ததினை 31.03.2022 வரை திருத்திய ஒப்பந்தம் செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.5116/2012/இ2.

அனுமதிக்கப்பட்டது. மன்ற அனுமதி எண் 1148

தனி அலுவலர்,
சிவகாசி நகர்மன்றம்.